மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2019ம் வருடம் செப்டம்பர் திங்கள் 09 ஆம் நாள் திங்கட்கிழமை

**O.S. No. 64/2009**

பழனிச்சாமி

..... வாதி

//எதிர்//

1) நரசிங்க நாயுடு

2) ராஜம்மாள்

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இவ்வழக்கு 30.04.2009ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.M. ரமணி அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M.N. ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் திரு. I. முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், கடந்த 30.08.2019ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கு, தாவா இரண்டு அயிட்ட சொத்துக்களும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது வகையறா ஆட்களோ வாதியின் அமைதியான அனுபவத்தை எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விளம்புகை பரிகாரம் தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட CRP (PD) No. 873/2018 ல் அசல் வழக்கில் முதல் நிலை எழுவினா வனைந்து அதனடிப்படையில் உத்தரவு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

**<u>1.திருத்தப்பட்ட பிராதின் சுருக்கம்:</u>**

தாவா 1வது அயிட்ட சொத்தான நத்தம் சர்வே எண். 1621 கிழமேல் 16 அடி தென்வடல்

10 அடி மொத்தம் 160 சதுரடி உள்ள காலியிடத்தை, வாதி கடந்த 21.05.1993ம் தேதி ஒரு S. வெங்கிடசாமி நாயுடு வகையறாவிடமிருந்து ரூ.3,400/-க்கு கிரையம் பெற்றுள்ளார். மேற்படி காலியிடமான தாவா சொத்தானது வாதியின் கிரையதாரரான வெங்கிடசாமிக்கு குடும்ப பாகமாக கிடைக்கப்பெற்று அதனை அவர் தனது கைவசம் வைத்து அனுபவம் செய்து வந்துள்ளார். வாதி தாவா சொத்தினை கிரையம் பெற்ற பிறகு 16.05.2008ந் தேதியில் தாவா சொத்திற்கு வாதி பெயரில் தோராய பட்டா ஏற்பட்டு, அதில் பெட்டிக்கடை வைத்து தாவா 1வது அயிட்ட சொத்தை வாதி அனுபவம் செய்து வந்துள்ளார். தாவா 2வது அயிட்ட சொத்தான சர்வே எண் 1734/10 ல் கிழமேல் 16 அடி தென் வடல் 9-1/2 அடி மொத்தம் 152 சதுரடி உள்ள காலியிடத்தை வாதி ஒரு குபேந்திரன் வகையறாவிடமிருந்து கடந்த 20.02.2009ந் தேதி ரூ.5,400/-க்கு கிரையம் பெற்று அன்று முதல் வாதி தாவா 2வது அயிட்ட சொத்தையும் தன் கைவசம் வைத்து அனுபவம் செய்து வந்த நிலையில், தாவா சொத்தில் எவ்வித உரிமையோ, அனுபவ பாத்தியமோ இல்லாத 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கான இல்லா நிலையதான பொய்யான ஆவணங்களை உருவாக்கி உரிமை கொண்டாடி வந்து, கடந்த 11.03.2009ந் தேதியில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் இருந்த வாதியின் அனுபவத்தை இடையூறு செய்துள்ளனர். அது குறித்து வாதி வாடிப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது காவல் நிலையத்தில், பிரதிவாதிகளை அழைத்து வாதியின் அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என எச்சரித்து அனுப்பியுள்ளனர். பிரதிவாதிகள் சட்டத்தை மதிக்காதவர்கள் என்பதால், எப்பொழுது வேண்டுமானாலும் தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்ய இயலும் என்பதால் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை பிரதிவாதிகளோ, அவர்களது வகையறா ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2) 1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:

தாவா 1வது அயிட்ட சொத்தான சர்வே எண். 1621 புதிய சர்வே எண். 1734/9 பட்டா எண். 292ன் படி குபேந்திரன் என்பவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், குபேந்திரன் என்பவர் பெயரில் பட்டா இருக்கும் போது, வாதி பெயருக்கு பிராதில் குறிப்பிட்டுள்ளது போல் தாவா 1வது அயிட்ட சொத்து 21.05.1993ம் தேதியிட்டு வெங்கிடசாமி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்று அதனடிப்படையில் வாதி பெயரில் தோராய பட்டா ஏற்பட்டுள்ளதாக கூறுவது பொய்யானதாகும் என்றும், மேற்படி பொய்யான கிரைய ஆவணத்தை மட்டும் வைத்து வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், தாவா 2வது அயிட்ட சொத்தான சர்வே எண். 1734/10ற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா எண். 1358ன் படி பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், பிராதில் வாதி குறிப்பிட்டுள்ளது போல் வாதி தாவா 2வது அயிட்ட சொத்தை

20.02.2009ந் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் குபேந்திரன் வகையறாமிடமிருந்து கிரையம் பெற்றதாக கூறுவது உண்மையல்ல என்றும், வாதி வருவாய்துறை ஆவணங்களை சரிபார்க்காமல் தாவா 2வது அயிட்ட சொத்தை கிரையம் பெற்றதாக கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றும், தாவா 2வது அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை கடந்த 01.04.2009ம் தேதியில் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு கிரையம் பத்திரம் செய்து கொடுத்துள்ளார் என்றும், எனவே 2வது அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், வாதி தனது பிராதில் குறிப்பிட்டுள்ளது போல் 11.03.2009ல் வாதி 1ம் பிரதிவாதிக்கு எதிராக புகார் கொடுத்தது உண்மை என்றும், புகாரினை விசாரித்த காவல் அதிகாரி 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்ததும், அப்புகாரின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதே உண்மையாகும் என்றும், மாறாக காவல் நிலையத்தில் எச்சரிக்கை எதுவும் செய்யவில்லை என்றும், வாதியின் அனுபவத்தை பிரதிவாதி ஒருபோதும் இடையூறு செய்யவில்லை என்றும், ஏனெனில் 2வது அயிட்ட சொத்தின் அனுபவத்தில் பிரதிவாதிகளே உள்ளனர் என்றும், தாவா சொத்தில் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், வருவாய்துறை ஆவணங்களை சரிபார்க்காமல் கிரையபத்திரம் பெற்றுள்ளதிலிருந்தே வாதி சட்டத்தை மதிக்காதவர் என்பது புலனாகும் என்றும், பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் வாதி கிரையம் பெற்று அதனடிப்படையில் பிரதிவாதிக்கு எதிராக வழக்கினை தாக்கல் செய்துள்ளதால், மக்கள் மத்தியில் நற்பெயர் உள்ள 1ம் பிரதிவாதி மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளார் என்றும், பிராதில் தாவா சொத்தின் மதிப்பு குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளதால், தாவா பிராது நிலைக்கத்தக்கதல்ல என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து 21.05.1995ம் தேதியிட்ட கிரையப்பத்திரமும், தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து 20.02.2009ம் தேதியிட்ட கிரையபத்திரமும் மோசடியான ஆவணம் என்பதாலும், 11.3.2009ம் தேதியிட்ட வாதியின் புகாரின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்ததாக வாதி கூறுவது உண்மையல்ல என்பதாலும், வழக்கிற்கான வழக்கு மூலம் தவறு என்றும், பிரதிவாதிக்கு எதிராக வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றும், தாவா 1வது, 2வது அயிட்ட சொத்தினை பொறுத்து அசல் ஆவணங்கள் எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எனவே வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யும்படி வேண்டப்பட்டது.

**<u>3) 2ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

அசல் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. பிராதில் இந்த நிர் பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்றவை பொய்யானதாகும் என்றும், அவற்றை வாதியே நிருபிக்க கடமைப்பட்டவர் என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தான சர்வே எண். 1621 புதிய சர்வே எண். 1734/9 பட்டா எண். 292ன் படி குபேந்திரன் என்பவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், குபேந்திரன் என்பவர் பெயரில் பட்டா இருக்கும் போது, வாதி பெயருக்கு பிராதில்

குறிப்பிட்டுள்ளது போல் தாவா 1வது அயிட்ட சொத்து 21.05.1993ம் தேதியிட்டு வெங்கிடசாமி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்று அதனடிப்படையில் வாதி பெயரில் தோராய பட்டா ஏற்பட்டுள்ளதாக கூறுவது பொய்யானதாகும் என்றும், மேற்படி பொய்யான கிரைய ஆவணத்தை மட்டும் வைத்து வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், தாவா 2வது அயிட்ட சொத்தான சர்வே எண். 1734/10ற்கு 1ம் பிரதிவாதி பெயரில பட்டா எண். 1358ன் படி பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், பிராதில் வாதி குறிப்பிட்டுள்ளது போல் வாதி தாவா 2வது அயிட்ட சொத்தை 20.02.2009ந் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் குபேந்திரன் வகையறாமிடமிருந்து கிரையம் பெற்றதாக கூறுவது உண்மையல்ல என்றும், வாதி வருவாய்துறை ஆவணங்களை சரிபார்க்காமல் தாவா 2வது அயிட்ட சொத்தை கிரையம் பெற்றதாக கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றும், தாவா 2வது அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை கடந்த 01.04.2009ம் தேதியில் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு கிரையம் பத்திரம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அதனடிப்படையில் தாவா 2வது அயிட்ட சொத்தின் அனுபவத்தில் 2ம் பிரதிவாதி இருந்து வருகிறார் என்றும், அதனால் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வாதிக்கு எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை என்றும், 11.03.2009ல் வாதி 1ம் பிரதிவாதிக்கு எதிராக புகார் கொடுத்தது உண்மை என்றும், புகாரினை விசாரித்த காவல் அதிகாரி 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்ததும், அப்புகாரின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதே உண்மையாகும் என்றும், மாறாக காவல் நிலையத்தில் எச்சரிக்கை எதுவும் செய்யவில்லை என்றும், வாதியின் அனுபவத்தை பிரதிவாதி ஒருபோதும் இடையூறு செய்யவில்லை என்றும், ஏனெனில் 2வது அயிட்ட சொத்தின் அனுபவத்தில் பிரதிவாதிகளே உள்ளனர் என்றும், தாவா சொத்தில் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், வருவாய்துறை ஆவணங்களை சரிபார்க்காமல் கிரையபத்திரம் பெற்றுள்ளதிலிருந்தே வாதி சட்டத்தை மதிக்காதவர் என்பது புலனாகும் என்றும், பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் வாதி கிரையம் பெற்று அதனடிப்படையில் பிரதிவாதிக்கு எதிராக வழக்கினை தாக்கல் செய்துள்ளதால், மக்கள் மத்தியில் நற்பெயர் உள்ள 1ம் பிரதிவாதி மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளார் என்றும், பிராதில் தாவா சொத்தின் மதிப்பு குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளதால், தாவா பிராது நிலைக்கத்தக்கதல்ல என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து 21.05.1995ம் தேதியிட்ட கிரையப்பத்திரமும், தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து 20.02.2009ம் தேதியிட்ட கிரையபத்திரமும் மோசடியான ஆவணம் என்பதாலும், 11.3.2009ம் தேதியிட்ட வாதியின் புகாரின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்ததாக வாதி கூறுவது உண்மையல்ல என்பதாலும், வழக்கிற்கான வழக்கு மூலம் தவறு என்றும், பிரதிவாதிக்கு எதிராக வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றும், தாவா 1வது, 2வது அயிட்ட சொத்தினை பொறுத்து அசல் ஆவணங்கள் எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எனவே வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யும்படி வேண்டப்பட்டது.

**<u>4) பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் எதிர் வழக்குரையின் சுருக்கம்:</u>**

வாதி கோரிய தாவா சொத்துக்கள் வாதிக்குரியது என விளம்புகை பரிகாரம் வாதி பெற சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், தாவா சொத்துக்களின் மதிப்பு குறைவாக கணக்கிடப்பட்டு TNCFV Act 1955ன் பிரிவு 25(b)ன்படி சரியான நீதிமன்றக்கட்டணம் செலுத்தப்படவில்லையென்றும், அசல் வழக்கிற்கு பிரதிவாதிகள் கடந்த ஜூன் 2009ம் வருடம் தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என தெளிவாக எதிர் வழக்குரை தாக்கல் செய்து 8 வருடங்கள் கழித்து Permanent Injunction Prayer இருந்து மாற்றிட Declaration Prayer வாதி கோர உரிமையில்லை என்றும், அசல் வழக்கின் Cause of action தேதியிலிருந்த 3 ஆண்களுக்குள் வாதி Declaration பெற சட்டப்படி உரிமையதாகவும், ஆனால் பிராதில் Cause of action சொல்லப்பட்டு இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு OS 64/2009 தாக்கலாகி அதிலுள்ள இடைக்கால மனுவை எதிர்த்து CMA 37/2009 CMA 38/2009 தள்ளுபடி ஆகி வாதி இவ்வழக்கின் மூலங்களை பற்றி நன்கு விபரம் அறிந்து 8 ஆண்டுகளுக்கு பிறகு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திலிருந்து விளம்புகை பரிகாரம் கோருவதற்குரிய காலவரையறை Limitation is Barred என்பதை ஆகி உள்ளது என்பதால், அசல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டப்பட்டது.

**5)** அசல் வழக்கு பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா 1வது, 2வது அயிட்ட சொத்துக்களை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது வாதி தாக்கல் செய்த I.A 139/2009 மனுவில் வாதிக்கு ஆதரவாக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் 01.07.2009ந் தேதியில் பிறப்பிக்கப்பட்டதை எதிர்த்து 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த CMA 38/2009 வழக்கு சார்பு நீதிமன்றத்தில் 18.01.2013ந் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வாதியின் உரிமை மறுக்கப்பட்டுள்ளதால், விளம்புகை பரிகாரம் கோரி பிராதினை திருத்தம் செய்ய வாதியால் இந்நீதிமன்றத்தில் திருத்தல் மனு IA 456/2017 தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு 05.03.2018ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி மனு நடவடிக்கையினால் மனக்குறைவுற்ற பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் CRP (PD) No. 873/2018 தாக்கல் செய்தபோது அம்மனு13.06.2018ந் தேதி தள்ளுபடி செய்யப்பட்டதுடன், இவ்வழக்கில் முதல் நிலை எழுவினா வனைந்து அதனடிப்படையில் உத்தரவு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

**<u>6). முதல் நிலை எழுவினா:</u>**

மேற்கண்ட மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளை CRP (PD) No. 873/2018 உத்தரவின்

கீழ் கடந்த 03.04.2019ந் தேதி இந்நீதிமன்றத்தில் வனையப்பட்ட முதல் நிலை எழுவினா..

1. Whether the suit is barred by limitation regarding the declaration of the suit property sought by the plaintiff?

2) Whether the plaintiff is entitled to seeking the relief of declaration in respect of the suit property?

**<u>முதல் நிலை எழுவினா 1,2க்கான தீர்வு:-</u>**

7) இரு தரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த நிர் வழக்கும் தாவா 1வது இலக்க சொத்தான சர்வே எண். 1621 புதிய சர்வே எண். 1734/9, 2வது இலக்க சொத்தான 1734/10 ஆகிய சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகளை கட்டுப்படுத்தி நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி வாதியால் 2009ம் வருடம் இந்த நிர் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னீடு வாதி விளம்புகை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்து இடைநிலை மனு I.A. N0o. 456/2017ல் 05.03.2018ம் தேதி மேற்படி அசல் வழக்கு பரிகாரம் திருத்தம் செய்ய அனுமதி வழங்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு கடந்த 13.06.2018ந் தேதியில் CRP(PD) No. 873/2018ல் மேற்படி விளம்புகை தொடர்பாக காலவரையறைச் சட்டத்தின் கீழ் முதல் நிலை எழுவினா வனைந்து தீர்வு காணும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் பேரில் இந்த நீதிமன்றத்தில் 03.04.2019ம் தேதியில் மேற்கண்டவாறு முதல் நிலை எழுவினா வனையப்பட்டுள்ளது.

8) பிரதிவாதிகள் தரப்பில் இந்த நிர் அசல் வழக்கும் 2009ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்ததில் 05.06.2009ம் தேதியிலேயே பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. மேற்படி எதிர்வழக்குரையில் தாவா சொத்தின் உரிமை குறித்து ஆட்சேபணை செய்யப்பட்ட நிலையில் விளம்புகை பரிகாரம் கோரும் வாதி காலவரையறைச்சட்டம் சரத்து 58ன்படி மூன்று வருட காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், ஆனால் வாதி தரப்பில் விளம்புகை பரிகாரம் மற்றும் அசல் வழக்கினை திருத்தம் செய்யக் கோரி 2017ம் வருடம் தான் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி அசல் வழக்கு விளம்புகை பரிகாரத்தை பொறுத்து காலவரையறை சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டது. வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் வாதிக்கு 21.5.1993 மற்றும் 20.2.2009ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரங்களின் படி பாத்தியப்பட்டது என்றும் அது முதல் அனுபவம் செய்து வருவதாகவும், தொடர்ந்து இந்த நிர்

வழக்கில் பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்ததால், இடைக்கால தடைஉறுத்துக்கட்டளை மனு தாக்கல் செய்து அதுவும் இடைநிலை மனு I.A No. 139/2009ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த பல்வகை மேல்முறையீடு மனு CMA 38/2009 மதுரை சார்பு நீதிமன்றத்தால் 18.01.2013ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும், எனவே உரிமை தொடர்பான பிரச்சனையில் விளம்புகை பரிகாரம் அவசியமானது என்றும் வாதுரைக்கப்பட்டது. இது தொடர்பாக வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்போது வாதி தரப்பில் முதலில் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் தொடர்ச்சியாக தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய இடைநிலை மனு IA 139/2009ன்படி 1.7.2009ம் தேதியில் வாதிக்கு சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த பல்வகை மேல்முறையீடு மனு எண். CMA 38/2009 மதுரை சார்பு நீதிமன்றத்தால் 18.01.2013ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

9) மேலும் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு சொத்தின் உரிமை தொடர்பாக தனிப்பட்ட முறையில் விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக வாதுரைகள் இல்லை. அதே போல் இந்த நிர் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையிலே வழக்கு சொத்தை பொறுத்து உரிமை மூலம் தொடர்பாக எவ்வித எதிர் பாத்திய கோரிக்கையும் (Counter claim) பிரதிவாதிகளால் கோரப்படவில்லை. மேலும் பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையில் தாவா 1வது லக்க சொத்திற்குரிய உரிமைபாத்தியம் தொடர்பான பொருண்மைகள் வாதுரைக்கப்படவில்லை. மேலும் சொத்தின் உரிமை மூலம் தொடர்பான பிரச்சனையில் விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர தடையாணை பரிகாரம் மட்டும் கோருவது சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் அடியிற்கண்ட வழக்கில் பின்வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அதுவும் (2019) 1 MLJ 539 LNIND 2018 AD 6707 ன் படி சட்ட இதழில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது.

P.S Ulagaratchagan Vs Kanagavelpandi and others

"Property law – possession of title – Suit for bare injunction – Plaintiff filed suit for permanent injunction on footing that she acquired title to suit property by way of sale deed- Appellant- 1st Defendant disputed claim of title, possession and enjoyment of Plaintiff and her predecessors in respect of suit property – Trial court dismissed suit which was reversed by First Appellate court, hence this appeal – Whether suit for bare injunction maintainable without prayer for declaration of title especially when Appellant had disputed title of plaintiff – Held, Plaintiff's claim of

title to suit property was in dispute and under cloud – Plaintiffs alleged possession and enjoyment of suit property not established to be lawful-Defendants set up rival title to suit property based on documents- Plaintiff should have amended suit for seeking declaration of title to suit property – Based on revenue records simplicitor, Plaintiff's alleged possession and enjoyment of suit property could not be concluded as lawful – Defendants had also placed proof of possession and enjoyment of property in dispute – Suit laid by Plaintiff for bare injunction without seeking relief of declaration of title held to be not maintainable as per law – Appeal allowed with costs.”

10) மேலும் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு சொத்து தொடர்பான வாதியின் உரிமை மாற்றம் தொடர்பான மேற்படி 21.5.1993 மற்றும் 20.2.2009 ஆகிய கிரைய பத்திரங்கள் மோசடியாக உருவாக்கப்பட்டதாக வாதுரைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது, 20.2.2009ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் கிரையம் கொடுத்தவர் மகாராஜன் மகன் M. குபேந்திரன் என்றும், 21.05.1993ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் கிரையம் கொடுத்தவர் பெயர் வெங்டேசன் மகன் V. குபேந்திரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் தாவா 2வது இலக்க சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாக குறிப்பிடும் மேற்படி 19.5.2009ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் மேற்படி கிரையம் கொடுத்தவர் பற்றி குறிப்பிடும் போது மகாராஜன் என்ற கிருஷ்ணமூர்த்தி மகன் குபேந்திரன் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வாதி, பிரதிவாதிகளுக்கு தாவா 2வது இலக்க சொத்தை கிரையம் கொடுத்த நபரான குபேந்திரன் என்பவரின் தகப்பனார் பெயர் தொடர்பாக மூன்று வேறுபட்ட நிலை காணப்படுகின்ற நிலையிலும், மேற்படி உரிமை மாற்றம் தொடர்பாக, மோசடி பொருண்மை எதிர் வாதமாக பிரதிவாதிகள் தரப்பில் வாதுரைத்த நிலையிலும், தாவா சொத்துக்களில் உரிமை மூலம் மற்றும் அது தொடர்பான உரிமை மாற்றம் மோசடியானதா என்பது குறித்து முழுமையான சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலேயே விசாரணை செய்யப்படவேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

11) மேலும் வழக்கு சொத்தின் உரிமை பாத்தியம் மற்றும் உரிமை மாற்றம் தொடர்பாக வழக்கு தரப்பினர்களிடையே பிரச்சனை ஏற்பட்டுள்ள நிலையில் வழக்கு தரப்பினர்களுக்குகிடையேயான தாவா சொத்துக்கள் குறித்து மேற்படி பிரச்சனையை அறுதியாகவும், முழுமையாகவும் தீர்வு காண்பதற்கு விளம்புகை பரிகாரம் தொடர்பாக ஆவணங்களின் அடிப்படையில் தீர்வு காண வேண்டியது அவசியம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) மேலும் பிரதிவாதிகள் தரப்பில் விளம்புகை பரிகாரம் உரிமை மூலம் தொடர்பாக 2009-ல் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் ஆட்சேபணை செய்தபின் காலவரையறைச்சட்டம் சரத்து 58ன்படி 3 வருடத்திற்கு தாக்கல் செய்யப்படாததால் மேற்படி பரிகாரம் காலவரையறை சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது என்று வாதுரைத்து அதற்கு ஆதரவாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRP(MD) No. 1991/2019ல் பிறப்பிக்கப்பட்ட முன்தீர்ப்பு சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், மாண்புமிகு மேலமை நீதிமன்றங்களால் "கா<u>லவரையறை தடை தொடர்பான பொருண்மை என்பது சட்டம் மற்றும் பொருண்மை சார்ந்தது (Mixed question of law and facts) என்றும், அதனை முழுமையான விசாரணையிலே தீர்வு காணப்படவேண்டும் என்பதும் மேலமை நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட நிலை நிறுத்தப்பட்ட சட்ட கோட்பாடாகும்.</u> மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், காலவரையறைச்சட்டம் தொடர்பான பொருண்மை குறித்து பிரச்சனை ஏற்பட்டுள்ள நிலையில், அதனை முழுமையான விசாரணையின் அடிப்படையிலே தீர்வு காண வேண்டும் என அடியிற்கண்ட வழக்கில் உத்தரவிட்டுள்ளது.

**<u>2011(2) MLJ 57 (Mad) Rosammal (vs) Paulina Edwin case</u>**

<u>Amendment-</u> It has been held that an amendment of plaint is permissible for the purpose of promotion of substantial cause of justice even though the relief is barred by limitation.

மேற்படி பொருண்மை மற்றும் சட்ட நிலைப்பாடுகளின் படி இந்த நிர் வழக்கில் வனையப்பட்ட முதல்நிலை எழுவினாவான விளம்புகைப்பரிகாரம் மற்றும் அது தொடர்பான காலவரையறைச்சட்டம் பாதிப்பு பற்றி முழுமையான சாட்சிய சான்றவணங்களின் அடிப்படையிலேயே தீர்வு காணப்படவேண்டுமென இந்நீதிமன்றத்தால் முடிவு செய்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக முதல்நிலை எழுவினாவாக வனையப்பட்ட விளம்புகை பரிகாரம் தொடர்பான காலவரையறை தடை என்பது சட்டம் மற்றும் பொருண்மை சார்ந்த பொருண்மையாக இருப்பதால், அதனை வழக்கின் இறுதிநிலையில் சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலேயே தீர்வு காணப்படவேண்டும் என முடிவு செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சுருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம். D. ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//